முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1548

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.12.2023,** திங்கட்கிழமை

1. பிரம்ம சூட்சும குருராஜனே
   பிரணவ சித்திமிகு ஆறுமுக அரங்கனே
   தர்ம சக்திகொண்டு கலியுகத்தில்
   தனிப்பெரும் தவசியாக அற்புதம் நடத்துகின்ற
2. நடத்துகின்ற ஆறுமுக அரங்கனே
   ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தடையற தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
   தக்கபடி சோபகிருது சிலை திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 09 ம் நாள், 25.12.2023, திங்கட்கிழமை)
3. தன்னிலே அரங்கன் நீ கேட்க
   தொடர்ந்துரைப்பேன் தர்மனே
   உன் சக்தி பெருகவேண்டி
   தண்டாயுதன் யான் நித்தம்நித்தம் ஆற்றல்கூட்டி
4. கூட்டியே சூட்சும சக்தியாக
   தொடர்ந்து உன்னுள் உலவி வருகின்றேன்
   தட்டாது நீ ஏற்கும் அனைத்து உணவுமுறையோடு
   தக்கபடி நீ செய்யும் சேவைகள் அனைத்திலும்
5. சித்தி தந்து ஆறுமுகன் யான் சூட்சுமமாக
   சர்வபலமாய் இருந்து அருள்புரிகின்றேன்
   புரியவே அரங்கனுக்கு வாசியோட்டம்
   புகழ்தருகின்ற தர்ம பலமனைத்தும்
6. ஆசிதந்து ஆறுமுகன் யான் நடத்த
   அற்புதமாய் அரங்கனின் சூட்சும புருவமத்தி
   மத்தியிலும் யானே ஜோதியாக
   பரிபூரண சித்தியாக கலந்துள்ளேன்

7. உள்ளபடி அரங்கனை காண்பவர்க்கு
உலகத்தில் இனி பிறவி ஏதுஏது
வல்லமைகொண்டு அரங்கன் சேவை செய்பவர்க்கு
வையகத்தில் மரணமில்லா பெருவாழ்வு

8. பெருவாழ்வு ஞானியாகும் மகா சூட்சுமம்
பிசகின்றி விளங்கி இனிதே உலகில்
தர்மவான் அரங்கன் வழி அவர்களெல்லாம்
தரணியில் ஞானிகளாகி சிறக்க நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–